*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI:* https://doi.org/10.63300/tm07042026.37

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# Feminist Awareness Thoughts in Imayam's Novels

**L. Indumathi[1*], Dr. Siva. Athirai[2],**
[1]Ph.D. Research Scholar, Post Graduate and Research Department of Tamil Dharmapuram Adhinam Arts College, Mayiladuthurai.
[2]Research Guide, Head of the Department of Tamil, Post Graduate and Research Department of Tamil, Dharmapuram Adhinam Arts College, Mayiladuthurai.
[*]Correspondence: indurashmi7122015@gmail.com.

**Article Info**
Received on 21-Mar-2026, Revised on 27-Mar-2026, Accepted on 27-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

This article explores the feminist awareness thoughts found in the novels of Imayam, a significant creator in modern Tamil literature. The article points out how traditional grammars such as 'shyness' (naanam) and 'chastity' (karpu), as defined by Sangam literature and Tolkappiyam, have been patriarchal oppressions imposed upon women. The women appearing in Imayam's novels are neither philosophers nor great beauties; rather, they are ordinary women struggling for their daily livelihood.

Through female characters in novels such as Arokkiyamary in Koveru Kazhudaigal, and others in Arumugam and Sedal, this article explains how Imayam has consciously recorded the sexual exploitation, labor exploitation, and social neglect faced by women in both rural and urban environments. Imayam's female characters—who keep flowing like water without faltering in any difficult situation and without thoughts of suicide—provide the courage and awareness necessary for modern society.

***KEYWORDS:*** *Imayam , Feminism , Awareness , Patriarchy , Labor Exploitation , Modern Novels , Social Struggle.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.37

# இமயம் நாவல்களில் பெண்ணிய விழிப்புணர்வு சிந்தனைகள்

[1]**லெ. இந்துமதி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வுத்துறை, தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை, மின்னஞ்சல்: indurashmi7122015@gmail.com

[2]**முனைவர் சிவ. ஆதிரை,** நெறியாளர், தமிழ்த்துறை தலைவர், தமிழ் உயராய்வுத்துறை, தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

இக்கட்டுரை, தமிழ் நவீன இலக்கியத்தின் முக்கியமான படைப்பாளியான இமயத்தின் நாவல்களில் காணப்படும் பெண்ணிய விழிப்புணர்வு சிந்தனைகளை ஆராய்கிறது. சங்க இலக்கியம் மற்றும் தொல்காப்பியம் வகுத்த 'நாணம்', 'கற்பு' போன்ற மரபுரீதியான இலக்கணங்கள் பெண்களின் மீது திணிக்கப்பட்ட ஆணாதிக்க அடக்குமுறைகளாக இருப்பதை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. இமயத்தின் நாவல்களில் வரும் பெண்கள் தத்துவ ஞானிகளோ அல்லது பெரும் அழகிகளோ அல்லர்; மாறாக, அவர்கள் அன்றாட வாழ்வாதாரத்திற்காகப் போராடும் சாமானியப் பெண்கள். 'கோவேறு கழுதைகள்' நாவலின் ஆரோக்கியமேரி, 'ஆறுமுகம்' மற்றும் 'செடல்' போன்ற நாவல்களில் வரும் பெண் கதாபாத்திரங்கள் வாயிலாக, கிராமம் மற்றும் நகரச் சூழல்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் சுரண்டல்கள், உழைப்புச் சுரண்டல்கள் மற்றும் சமூகப் புறக்கணிப்புகளை இமயம் எவ்வாறு விழிப்புணர்வுடன் பதிவு செய்துள்ளார் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. எத்தகைய இக்கட்டான சூழலிலும் தளராது, தற்கொலை எண்ணமின்றி, தண்ணீரைப் போல ஓடிக்கொண்டே இருக்கும் இமயத்தின் பெண் கதாபாத்திரங்கள், நவீன சமூகத்திற்குத் தேவையான துணிச்சலையும் விழிப்புணர்வையும் வழங்குகின்றன.

---

**திறவுச்சொற்கள் (Keywords) இமயம், பெண்ணியம், விழிப்புணர்வு, ஆணாதிக்கம், உழைப்புச் சுரண்டல், நவீன நாவல்கள், சமூகப் போராட்டம்**

**முன்னுரை**

தமிழ் நவீன இலக்கியத்தில் தொடர்ச்சியான, தீவிரமான இயக்கம் கொண்டவர் இமையம். மனித வாழ்க்கைப் பாடகளின் கதைகளை ரத்தமும், சதையுமாகப் படைப்பாக்கம் செய்யும் படைப்பாளிகளில் ஒரவர் இமயம். பெண்ணியங்களில் பலவகை என்பது தவிர்க்க முடியாதது. இவற்றில் உண்மையான பெண்ணியத்தை தேடுவதென்பது கேலிக்குரியது என்கிறார் இமயம். நிலவுடைமைச் சமூகம் நன்கு வளர்ச்சி பெற்றக் காலத்தில் தந்தை வழிச் சமூகம் உருவாக்கிய பிறகுதான் முதன் முதலில் பெண் கவரப்பட்டு அடிமைப்படுத்தப்படுகிறாள். பெண் உடலமைப்பு,

பாலினம் அடிப்படையிலும், குடம்பம், சமூக, அரசியல், பொருளாதாரம், நிறுவுனங்களில் பெண்களின் உழைப்பு சுரண்டப்படுதலும், பெண்ணை இன உற்பத்திக் கருவியாகவும், பொருளாகவும் பார்ப்பதாலும் நிலவுடைமைச் சமூகம் முதல் இன்று வரை பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். ஆணாதிக்கத்தின் கடுமையான அடக்கு முறையிலிருந்து விடுதலை பெறுவதற்காக ஒவ்வொரு பெண்களும் போராடி வருகின்றனர். இமயத்தின் அனைத்து நாவல்களிலம், பெண்களை முன்னிருத்தியும், மையமாகக் கொண்டும் தன் நாவலில் கதாபாத்திரம் வழியாக பெண்களுக்க பல்வேறு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியுள்ளதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**இமயம்**

புதின வரலாற்றில் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்றவர் ஆசிரியர் இமயம். கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டத்திலுள்ள கழுதூர் என்ற கிராமத்தில் 10.03.1964-ஆம் ஆண்டு பிறந்தவர். இமையத்திற்கு பெற்றோரால் இட்டப் பெயர் அண்ணாமலை என்பதாகும். ஆனால் தன்னுடைய இலக்கியப் படைப்புகளுக்கு இமயம் என்ற பெயரினை பயன்படுத்தி வருகின்றார். இமயம் இதுவரை கட்டுரைகள், சிறுகதைகள், சிறுகதை தொகுப்புகள், ஒன்பது புதினங்களும் எழுதியுள்ளார். பல்வேறு விருதுகளையும் பெற்றவர். குறிப்பாக ‘செல்லாத பணம்’ புதினத்திற்கு சாகித்ய அகாடாமி விருது கிடைக்கப்பெற்றுள்ளது. கனடா இலக்கியம் “தோட்ட இயல் விருதும்”, “குவெம்பு தேசிய விருது” பெற்றுள்ளூார். இமையத்தின் கதைகள் எல்லாம் சமூகம் பற்றிய பெண்ணிய விழிப்புணர்வு கனவுகள் ஆகும்.

**சமூகத்தில் பெண்ணின் நிலை**

“சொல்லெதிர் சொல்லல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள்வயி னான” (தொல்.களவு. 108)

தலைவன் சொல்லிற்கு எதிர்சொல் பேசுதல் அருமையானது எனக் கூறிய பின்னர் பேசாது நிற்பதே தலைவியிடம் நிகழும் நிகழ்வாகம். இதன் மூலம் தலைவனிடம் பேசுதல் அருமையானதுதான் ஆனால் பேசக்கூடாது என மறைமுகமாய்க் கட்டளையிடப்படுவதைக் காணமுடிகிறது.

“உயிரினும் சிறந்தன்று நானே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புசிறந் தன்றெனத்
தொல்லோர்க் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்

நாவில் நன்மொழி, கிளவி கிளப்பினும்

ஆவகை பிறவும் தோன்றுமென் பொருளே” (தொல்.களவு. 111)

உயிரைவிடச் சிறந்தது நாணம், நாணத்தை விடச் சிறந்தது கற்பு என்ற முன்னோர் கூற்றோட தவறு செய்த தலைவனை தலைவி வருத்தமுற பேசாது ‘கற்பு’ எனும் ஒன்றுமில்லா நிலைக்குப் பொருள் கூறிய உயிரையும் விட சிறந்ததாக உடையது கற்பு என உருவாக்கி அது முன்னோர் மொழிவெனவும் தவறு செய்த கணவனை எதிர்த்து எதுவும் பேசக்கூடாது எனவும் அப்படிப் பேசினால் அது கற்பிற்கு இலக்கணமாய் இருக்காது என்றும் ‘கற்பு’ என்ற இலக்கணத்தைப் பண்டைய ஆணாதிக்கச் சமூதாயம் பெண்களின் மீது திணித்து பெருங்கொடுமை செய்ததை அறியமுடிகிறது.

ஆனால், இமையம் நாவலில் காட்டுமும் பெண்கள் அதிகம் படித்தவர்கள் அல்ல. ஆங்கிலம் கற்றவர்களோ. தத்துவ விசாரங்களில் ஈடுபடுபவர்களோ அல்ல. பெரிய அழகிகளும் அல்ல. சமூகம் சார்ந்து பேசக்கூடிய சிந்தனை வாதிகளோ புரட்சிப் பெண்களோ அல்ல. தன் வாழ்நாளெல்லாம் வயிற்றை நிரப்புவதற்காக இச்சமூகத்தில் போராடுபவர்கள். இந்த பெண்களுக்கு எதிர்கால கனவுகள் கூட வருவதில்லை. மீறி வந்தாலும் வயிறு நிறை சாப்பிட்டது போலவே கனவு காண்பார்கள் இமயம் கதைகளில் வரும் பெண்கள்.

இமயத்தால் படைக்கப்பட்ட பெண்கள் குடும்பப் பெண்கள் மாதிரி வீடும், தெருவும் என்று மட்டுமே இருக்கக் கூடியவர்கள் அல்ல. பல்வேறு ஊர்களில் மக்கள் திரண்ட இருக்கக்கூடிய சபையில் ஆடக்கூடியவர்கள். பாடக்கூடியவர்கள், பேசக்கூடியவர்கள் ஆவார். எந்த நிலையிலும் தேங்கிப் போகக்கூடியவர்கள் அல்ல. தண்ணீர் போல் ஓடிக்கொண்டேயிருப்பவர்கள். ஒவ்வொரு கணத்தையும் ஆசை தீர வாழ துடிப்பவர்கள். இமயம் கதைகளில் வரும் பெண்கள் ஒருவர் கூடி தற்கொலை செய்துகொலலும் நிலையை தன் கதைக்குள் கொண்டுவரவில்லை. இமையம் இத்தகைய படைப்புகளின் வழி பெண் இனம் விழிப்புணர்வைப்பெற உறுதுணையாக இருக்கின்றன.

> “ஆரோக்கியம் மேரி வாழ இருப்பதை கண்டு துடிக்கிறாள். ஆனால், மற்றப் பெண்களை வெகு சாதாரணமாக சரிசெய்து விடுகிறாள்” (கோவேறு கழுதைகள்)

இப்புதினத்தின் வழி வாழ்வில் பிரச்சனைகளை சமாளித்து ஒரு பெண் எவ்வாறு போராடி வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதை போவேறு கழுதைகள் என்ற நாவலில் ஆரோக்கியமேரி வழி இமையம் எடுத்துக் கூறியுள்ளார்.

**விழிப்புணர்வும் துணிச்சலும்**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.37

சமூக ஒழுக்கம், நீதிநெறி, அறப்பண்புகள் எல்லாம் பெண்ணை மையப்படுத்தியே சமூகம் வைத்திருக்கிறது. பெண் ஓடிவிடுவாளோ என்ற தனிமனித அச்சம் மற்றும் சமூக அச்சம்தான் பெண்களைப் பற்றி எழுத வைக்கிறது. முன்பின் தெரியாத ஒரு ஆணோடு வாழ்வதற்குப் போகிறாள் பெண். பதினாறு பதினேழு வயதிலேயே ஒரு பெண்ணால் குழந்தையை பிரசவிக்க முடிகிறது. எவ்வளவு பெரிய தைரியமான செயல். இது பெண்ணின் துணிச்சலும் உண்டு. இந்த தைரியத்தில், துணிச்சலில் நூறில் ஒரு பங்குகூட ஆணிடம் இல்லை. ஆனால், இமயம் படைப்புகளில் படைக்கப்பட்ட பெண்கள் தைரியமானவர்கள், துணிவு மிக்கவர்கள், பெண்ணிற்குரிய தகுதிகளாக சங்க இலக்கியம் சொன்ன பெண்ணின் இலக்கணத்தை தகர்த்தவர்கள்.

நம்முடைய புராண, இதிகாரச கதைகள், வாய் மொழி கதைகள் எல்லாம் ஏன் பெண்ணுக்கான ஒழுக்கத்தை அறத்தைப் பற்றி மட்டுமே பேசுகின்றன. ஏனெனில், புராணங்களின் கதைகளில் வரும் பத்தினி பெண்கள் சொன்னால் மழை வரும், மாநகரம் எரியும், பத்தினி கடடளையிட்டாள் பஞ்ச பூதங்களம் கைகட்டி நிற்கும் என்று எதற்காக சொன்னார்கள் என்றால் பெண் இயல்பாகவே வலிமையானவள், மனரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும் என்பதனால்தான். இதனால்தான் பெண்களை வெல்ல முடியாது என்பதினை ஆண்கள் கருதினர்.

**சமூகத்தில் விழிப்புணர்வை தந்த நாவல்கள்**

பெண்ணியம் குறித்த விழிப்புணர்வு தமிழ் நாவல்களின் தொடக்க காலம் தொட்டே ஓரளவு இருந்து வந்திருக்கிறது எனலாம். தமிழில் முதல் நாவலான "பிரதாப முதலியார் சரித்திரம்" என்ற நாவலில் பிரதாப முதலியாரின் மனைவியா வரும் ஞானாம்பாள் கல்வி கற்றவளாகவும், போராடும் குணம் உள்ளவளாகவும் காணப்படுகிறாள். காலம் காலமாக இருந்த பெண்ணடிமைச் சமூகத்தில் இருந்து விடுபடும் முதல் பெண்ணாக இவள் காட்டப்படுகிறாள்.

"எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை" எழுதிய இரண்டு நாவல்களில் ஒன்று பெண்ணிய சிந்தனைகளோடு எழுதப்பட்டது ஆகும். சமூதாயத்தில் பெண்ணிற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை 'மருத்துவன் மகள்' என்ற நாவல் பெண்ணிய விழிப்புணர்வு நாவல்களாக உள்ளன. 'எம்.வி. வெங்கட்ராம்' தம்முடைய 'ஒரு பெண் போராடுகிறாள்', 'நித்திய கண்ணி' ஆகிய இரு நாவல்களும் பெண்களின் பெண்ணியம் மற்றும் விழிப்புணர்வை முன் நிறுத்தி எழுதிய நாவல்கள் ஆகும். ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்', 'கங்கா எங்கே போகிறாள்' இக்கதையில் வரும் கங்கா பெண்ணுக்கு ஏற்படும் அனைத்துச் சிக்கல்களையும் அடைந்து இறுதியில் கங்கையில் மூழ்கி மறைகிறாள். பாமா எழுதிய 'கருக்கு' என்ற நாவல் தலித் பெண்ணின் வாழ்வியல்

போராட்டங்களை எடுத்துக் காட்டுகின்றன. கு. சின்னப் பாரதி எழுதிய 'சங்கம்' என்ற நாவல் மலைவாழ் பெண்களைச் சமூகம் எப்படி நடத்துகிறது என்பதை சுட்டிக்காட்டுகிறது.

சமூக அவலங்களைக் கூறும் நாவல்கள் பிரபஞ்சனின் 'எனக்குள் இருப்பவள்', ஜெயமோகனின் 'ஏழாம் உலகம்', எஸ். ராமகிருஷ்ணனின் 'நெடுங்குருதி', கல்கியின் 'பார்த்திபன் கனவு' போன்ற நாவல்கள் பெண்களின் விழிப்புணர்வு பற்றி எடுத்துரைக்கின்றன.

**நகர பெண்களின் நிலை**

இமயம் தன் நாவல்களின் கிராமங்களில் வரும் பெண்களை மட்டும் சுட்டிக்காட்டவில்லை. நகர வாழ்வில் இருக்கும் பெண்கள் அவல நிலைகளை தன் நாவலில் விழிப்புணர்வுடன் எடுத்துக் காட்டியுள்ளார். நகரமயமாதல் பெண்களை ஒரு வகையில் சுதந்திரமானவர்களாக மாற்றுகிறது. அதே நேரத்தில் பெண்களை இரட்டை உழைப்புக்க ஆளாக்குகிறது. கிராமத்தில் மட்டுமல்ல நகரத்திலும் பெண்களுக்கு குறைந்த சம்பளம் தரப்படுகிறது. பெண்களை வேலைக்கு எடுப்பதே குறைந்த சம்பளம் கொடுக்கலாம் என்பதற்காகத்தான். அதிக உழைப்பு குறைந்த சம்பளம் பெண்கள் என்றால் பாலியல் சீண்டலும் செய்யலாம் என்பதனை 'ஆறுமுகம்' நாவலில் வரக்கூடிய பெண்களில் ஒருத்திக்கூட பாலியல் சீண்டலுக்கும், பாலியல் வக்கிரத்திற்கும் ஆளாகாதவள் என்று யாரையும் அடையாளம் காட்ட முடியாது. இதுதான் நகரமயமாதல் பெண்களுக்கு தந்த வெகுமதி. இதை தான் வளர்ச்சி என்னும் முன்னேற்றம் என்றும் போற்றுகிறோம். அதிவேக வளர்ச்சி அதுவே சீரழிவு என்று தன் நாவலில் வழியாக படைத்துக்காட்டியவர்.

'கோவேறு கழுதைகள்' நாவலில் வரும் ஆரோக்கியம் என்ற பெண் ஒரு கிராமத்தின் சொத்தாகவம், ஒரே ஒரு கிராமத்திற்காக மட்டுமே பலியிடப்பட்டவளாக இருக்கிறாள். 'ஆறுமுகம்' நாவலில் வரும் தனபாக்கியம், சின்னப்பொண்ணு, வசந்தா, அபிதா ஒரு நகரத்தின் சொத்தாக பலியிடப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

'செடல்' நாவலல் வரும் செடல், பாஞ்சாலி, லெட்சுமி ஆகியோர் கிராமம், நகரம் என்ற எல்லையை மீறி பல ஜில்லாவிற்கும் பலி கொடுக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். செடலுக்கு முப்பது கிராமங்கள் பட்டயம் சம்பந்தப்பட்ட பெண்கள் அல்ல என்பது நாவல் எடுத்துதுக்காட்டுகிறது. இமயம் நாவல்களில் வரும் அனைத்து பெண்களும் இச்சமூகத்தில் எவ்வாறு போராடுகிறார்கள் என்பதையும், தன் நாவலின் வழியாக அனைத்து கால பெண்களுக்கும் எப்படி விழிப்புணர்வை தந்துள்ளார் என்பது இவரின் நாவல்கள் வழிநின்று இக்கட்டுரை ஆய்வதாக அமைந்துள்ளது.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI:* https://doi.org/10.63300/tm07042026.37

**பார்வை நூல்கள்**

[1.] தொல்காப்பியர், தொல்காப்பியம் (களவு-103 பாட).

[2.] மேலது. (களவு-111 பாட).

[3.] இமயம், கோவேறு கழுதைகள், கிரியா பதிப்பகம், சென்னை, 2006.

[4.] இமயம், ஆறுமுகம், கிரியா பதிப்பகம், சென்னை, 1999.

[5.] இமயம், செடல், கிரியா பதிப்பகம், சென்னை, 2006.

[6.] எம்.எஸ். பூர்ணலிங்கம், மருத்வன் மகள் (நாவல்).

[7.] எம்.வி. வெங்கட்ராம், ஒரு பெண் போராடுகிறாள்.

[8.] எம்.வி. வெங்கட்ராம், நித்திய கண்ணி.

[9.] ஜெயகாந்தன், சில நேரங்களில் சில மனிதர்கள்.

[10.] பாமா, கருக்கு.

[11.] பரபஞ்சன், எனக்குள் இருப்பவள்.

[12.] ஜெயமோகன், ஏழாம் உலகம்.

[13.] எஸ். ராமகிருஷ்ணன், நெடுங்குருதி.

[14.] கல்கி, பார்த்திபன் கனவு.